குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண் 38/2022

எ.ம.சா.1

2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 28–ம் தேதி புதன் கிழமை எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜ்குமார் | தொழில் | |
| தந்தை பெயர் | கோவிந்தசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 11.56 மணி,

Complainant Murugesan present. Advocate Mr.C.S.Bhavanirajan present for Complainant. Accused Rajkumar Present. Advocate Mr.Meenatchisundaram present for Accused.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

1) நான் தற்போது எந்த தொழிலும் செய்யவில்லை. இதற்கு முன்பாக தாரமங்கலத்தில் ஸ்ரீ அம்மன் ஜுவல்லரி என்ற பெயரில் 15 வருடமாக 2019 ம் ஆண்டு இறுதி வரை நகை கடை வைத்து இருந்தேன். தாரமங்கலத்தில் எந்த முகவரியில் கடை வைத்திருந்தேன் என்றால் கதவு எண் ஞாபகம் இல்லை. ஜலகண்டாபுரம் மெயின் ரோட்டில் இடதுபுரம் வைத்திருந்தேன். எனது கடைக்கு அருகில் வலதுபுரம் தனபால் என்பவரின் டீ கடையும், இடதுபுரம் இருசக்கர வாகனம் பழுது பார்க்கும் கடை இருந்தது. எனது கடையில் எவ்வளவு முதலீடு செய்திருப்பேன் என்றால் 400 கிராம் தங்கமும், 20 கிலோ வெள்ளியும் முதலீடு செய்திருந்தேன். மேற்படி தங்கம் மற்றும் வெள்ளியை நகை வேலை செய்பவரிடம கொடுத்து நகைகளாக மாற்றி வியபாரம் செய்து வந்தேன்.

2) மேற்படி முதலீட்டுக்கான தொகை எப்படி வந்தது என்றால் எனது தந்தையின் பணி ஓய்வின் போது பெற்ற பணத்தை கொண்டும், மீதம் கடன் வாங்கியும் முதலீடு தொகை ஏற்பாடு செய்தேன். மேற்படி கடை எனது சொந்த இடத்தில் நடத்தி வந்தேன். அந்த கடையை வங்கியில் அடமானம் வைத்து அதில் வந்த பணத்தை வைத்து எனது தொழிலில் முதலீடு செய்தேன். அந்த கடை எனக்கு சொந்தமானது என்பதற்கு ஆவணம் ஏதும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கடை வங்கி ஏலத்திற்கு சென்ற சமயத்தில் கடன் கொடுத்த நபர் அவருடைய கடனுக்காக அந்த கடையை எடுத்துக் கொள்ள கேட்டதால் அவருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டேன். எனது கடையை அடமானம் வைத்தது தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி தாரமங்கலம் கிளை ஆகும்.

3) நகை கடை வைப்பதற்கு முன்பாக எனது வீட்டில் வெள்ளி தொழில் செய்து வந்தேன். எனது கடையில் வேலை ஆட்கள் யாரும் இல்லை. எனது கடையில் CCTV Camera வைத்திருந்தேன். எனது மனைவியும் நானும் தான் கடையை பார்த்துக் கொண்டோம். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். அனைவரும் தாரமங்கலத்தில் குடியிருந்தோம். தற்போது சேலத்தில் உள்ள மல்லமூப்பம்பட்டி கிராமத்தில் ராமகவுண்டனூரில் குடியிருந்து வருகிறோம். புகார்தாரரை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது கடைக்கு வரப்போக தெரியும். 10 ஆண்டு காலமாக எனக்கு நண்பர் ஆவார். எனது கடைக்கு எதற்காக வருவார் என்றால் அருகில் உள்ள டீ கடைக்கு வரும் போது எனது கடைக்கு வந்து பேசிக் கொண்டு இருப்பார். நாங்கள் அடிக்கடி சந்தித்து கொள்வோம், நானும் அவரது கடைக்கு செல்வது உண்டு.

4) எனக்கு SBI தாரமங்கலம் கிளையில் வங்கி கணக்கு உள்ளது, அம்மன் ஜுவல்லரி என்ற பெயரில் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி தாரமங்கலம் கிளையில் வங்கி கணக்கு உள்ளது. மேற்படி இரண்டு வங்கி கணக்கும் எனது செயல்பாட்டில் தான் இருக்கும். மேற்படி நகைகடைக்கு உரிமம் எனது பெயரில் தான் உள்ளது, பங்குதாரர்கள் யாரும் இல்லை. மேற்படி கடைக்கு முழு உரிமையாளரும் நான் தான்.

5) புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.13 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.